1970 டிசம்பர் 2]

அனுப்பப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். அன்னியாறு சங்கமத்திற்குக் கீழிருந்து உப்பாண்டம் வரை பழவாற்றில் வெள்ளத் தடுப்புக் கரைகள் அமைப்பதும் அவசியமாக வுள்ளது.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக கீழ்த் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆற்றுக் கரைகள் பூராவும் உடைந்து போயிருப்பதனால் அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்படுத்தி, வருகிற கோடை காலத்திலாவது கரைகளைப் பலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தைச் சீர்ப்படுத்த அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது.

திரு. அ. மாரிமுத்து : தற்போது பெய்த மழை காரணமாகப் பழவாற்றுக்கு இருமருங்கிலுமுள்ள பயிர்கள் அநேக ஆயிரம் ஏக்கர்கள் நாசமாகியிருப்பதை அமைச்சர் அம்மையார் அவர்கள் பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அங்குள்ள விவசாயிகளும், தனி நபர்களும் அமைச்சர் அவர்களிடம் குறிப்பிட்டது பழவாற்றுக்குக் கரையே இல்லை என்பதை அரசு உணர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து ஆக்க வேலையில் ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே பதில் கூறிவிட்டேன். வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. கரைகள் அமைக்கும் பணிக்கு திரு. கிட்டப்பா அவர்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன் —அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திருவண்ணாமலை—தானிப்பாடி சாலை வேலை

* 97 வினா.—திரு. கே. சகாதேவக் கண்டர் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து தானிப்பாடி போகும் நெடுஞ் சாலையில் ராதாபுரம் கிராமத்தில் இருந்து சுமார் ஒரு மைல் நீளத்திற்கு கருங்கல் பேபி ஜல்லிகள் ரோடின் ஓரமாக திப்பைகள் கட்டி வைக்கப்பட்டு சுமார் மூன்று ஆண்டுகளாக ரோடு போடாமல் நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்கு தெரியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) திருவண்ணாமலை—தானிப்பாடி சாலையில் (அரசு சாலை) ராதாபுரம் கிராமம் அருகில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தார் போடும் பணி மேற்கொள்ளப்படவில்லை என்றும், சாலையோரங்களில் சாலை போடும் பொருட்கள் எவையும் கொட்டிவைக்கப்படவில்லை என்றும் தலைமைப்பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணிகள்) அறிவித்து உள்ளார்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவரவர்களே, நெடுஞ்சாலைப் பணித்துறையால் கான்டிராக்ட் கோரப்பட்டு, அதற்கான டேவணித் தொகை கட்டி, ஜல்லிகளைப் போட்டு ரோடு ஒரு மைல் நீளம் போட்ட பிறகு, ஆளும் கட்சிக்கு எதிராக வேலை செய்தார் என்று அந்த வேலையை ஒப்படைக்காமல் நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? கட்டப் பட்ட டேவணித்தொகை திருப்பிக் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி திருப்பித் தரப்படவில்லையென்றால், அதைத் திருப்பித்தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னிடத்தில் உள்ள விவரப்படி, திருவண்ணாமலை தானிப்பாடி சாலையில் ராதாபுரம் கிராமம் அருகில் தார் போடும் பணி மேற்கொள்ளப்படவில்லை என்று தலைமைப் பொறியாளர் கூறியிருக்கிறார். போதிய விவரம் எழுதிக்கொடுத்தால், தலைமைப் பொறியாளருக்கு அனுப்பி, தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

Entry of non-Hindus in Temples

* 98 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any rules have been framed by this Government to be observed when followers of other religions visit Hindu temples in Tamil Nadu ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) & (இ) சட்ட மன்றப் பேரவையில் முதலமைச்சர் தெரிவித்த அறிக்கையை யொட்டி, இந்து சமய அறக்கட்டளைத் துறை ஆணையாளர், தமிழ் நாடு 1947-ஆம் ஆண்டு ஆலய நுழைவு அனுமதி விதிகளுக்கு வரைவுத் திருத்தங்களைப் பணிந்தனுப்பினர். அவை பரிசீலனையில் உள்ளன. திருத்தத்தின் நகல் ஒன்று நாளடைவில் பேரவைமுன் வைக்கப்படும்.

* * * * * *

Dr. H. V. HANDE : May I know from the Hon. Minister whether any steps have been taken by this Ministry to see that religious sentiments of worshippers of temples are not wounded or hurt in any manner ? Whenever persons of other religions come inside Hindu temples they should respect the religious sentiments of worshippers. What steps have been taken by this Government to see that the religious sentiments are not hurt? May I know whether concrete steps in that direction have been taken recently during the last one or two months ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவரவர்களே, 5—1—1970 அன்று எச். ஆர். ஆக்ட் 3ஐ நீக்கிவிட்டபடியால், அது சம்பந்தமாக 8—4—1970 அன்று முதலமைச்சர் சட்டமன்றத்தில்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.